Copy

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

**CC.No.69/2022** **Date :17/08/2023**

**PW 1(சந்திரசேகர ராஜா த/பெ.கண்ணன் ) குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.**(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்/4 ம் எதிரி ஆஜர் இல்லை/கு.வி.மு.ச.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது )**

**1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

3. 01/04/2012 முதல் 31/03/2014 வரையிலான தணிக்கை அறிக்கை இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. அந்த தணிக்கை அறிக்கை தாக்கல் செய்யாததற்கான காரணம் தனி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதால் நாங்கள் அதை தாக்கல் செய்யவில்லை. ஒவ்வொரு ஆண்டும் முடிவடைந்த பிறகு 3 மாதத்திற்குள் தணிக்கை அறிக்கை சமர்பிக்கப்படவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு தணிக்கை அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட பிறகு முறைகேடுகள் கண்டறிந்தால் 3 மாதங்களுக்குள் விசாரணை தொடரப்படவேண்டும் என்றால் சரிதான். 31/03/2013 ம் ஆண்டுக்கான தணிக்கை அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட பின்பு ஒரு வருட காலத்திற்கு எங்களால் எந்த விசாரணையும் தொடரப்படவில்லை என்றால் சரியல்ல. 31/03/2014 வரை துறை சம்மந்தமான நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டு அதற்கான ஆவணங்களை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2014 ம் ஆண்டிற்கு பின்பு ஒன்றரை

வருடங்களாக விசாரணை அலுவலரை நியமிக்காததற்கான காரணம் ஏதும் உண்டா என்றால் இல்லை. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிரிக்கு எதிரான ஆவணங்கள் எங்களால் இந்த வழக்கிற்கென உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. தணிக்கை அறிக்கையின் போது ஒவ்வொரு அலுவலகத்திலிருந்தும் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டது என இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஏனென்றால், அது கூட்டுறவு பால் தணிக்கை அறிக்கை துறை சம்மந்தப்பட்டது. தணிக்கை அறிக்கையுடன் எந்தெந்த அலுவலகங்களால் என்னென்ன ஆவணங்களை எந்தெந்த தேதியில் சமர்பித்தார்கள் என்ற விவரத்துடன் அறிக்கை சமர்பிக்கப்பட்டதா என்றால் இல்லை.

4. விசாரணை அலுவலர் என்னென்ன ஆவணங்களை பார்வையிட்டு விசாரணை அறிக்கையை தாக்கல் செய்தார் என எனது விசாரணையின் போது தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். என்னென்ன ஆவணங்களை விசாரணை அலுவலர் பார்வையிட்டு விசாரணை அறிக்கை தாக்கல் செய்தார் என அவரது அறிக்கையுடன் அவர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். முறையான ஆவணங்கள் ஏதும் இன்றி விசாரணை அலுவலர் தாக்கல் செய்த விசாரணை அறிக்கையின் அடிப்படையில் முதலாம் எதிரியின் மீது இந்த வழக்கை நான் தொடர்ந்து உள்ளேன் என்றாலும் சரி அல்ல. எனக்கு முன்பு பணிபுரிந்து அதிகாரிகள் யாரும் 2012-2013 ஆம் ஆண்டில் நடைபெற்ற முறைகேடுகள் குறித்து ஏதேனும் கண்டறிந்துள்ளார்களா என்றால் இல்லை. உண்மையிலேயே அந்த காலகட்டத்தில் தவறுகள் ஏதும் நடந்திருந்தால் அவர்கள் கண்டுபிடித்து இருப்பார்கள் என்றாலும் இல்லை என்பதால் தான் பின்னிட்டு ஆவணங்களை தயார் செய்து எதிரிகளை இந்த வழக்கில்

சேர்த்துள்ளோம் என்றாலும் சரி அல்ல. வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து ஆவணங்களும் எங்களால் ஜோடிக்கப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. அதனால் தான் அதன் விவரங்களையும், தேதிகளையும் முரண்பட்டு கூறியுள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் கூறப்பட்ட சம்பவம் உண்மையானதாக இருந்தால் 01/04/2013 முதல் 31/3/2014 வரையிலான தணிக்கை அறிக்கையினை இந்த வழக்கில் நாங்கள் தாக்கல் செய்திருப்போம் என்றால் சரி அல்ல.

**<u>3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1.முதலில் விசாரணை மூன்று மாதத்திற்குள் முடிக்க முடியவில்லை அதனால் இரண்டு முறை மூன்று மூன்று மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்யப்பட்டது. அந்த கால நீட்டிப்பு செய்ய விசாரணை அலுவலரால் எப்போது எங்களிடம் கொடுக்கப்பட்ட மனுவை இந்த வழக்கில் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மூன்று மாதம் கால நீட்டிப்பு செய்ததற்கான உத்தரவில் விசாரணை அலுவலர் கொடுக்கப்பட்டதாக கூறப்படும் வேண்டுகோள் கடிதத்தை காண்பித்துள்ளோமா என்றால் பார்வை 2 ல் காண்பித்துள்ளோம். விஜயா எழுதிய வேண்டுகோள் கடிதத்தை வேண்டுமென்றே இந்த வழக்கில் தாக்கல் செய்யாமல் மறைத்துள்ளோம் என்றால் சரியல்ல. விசாரணை அலுவலர் தாக்கல் செய்த அறிக்கையில் கூறப்பட்ட குறைபாடுகளை சரிசெய்ய நான் நடவடிக்கை எடுத்தேனா என்றால் நான் எடுக்கவில்லை. குற்ற வழக்கு தொடர்வதற்கு முன்பு வேறு நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டதா என்றால் தண்ட தீர்வை நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த தொகைகளை வசூல் செய்ய மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு ஏதும் தொடுக்கப்பட்டதா என்றால் தண்ட தீர்வு நடவடிக்கையின் மேல் முறையீடு மட்டுமே மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்க

முடியும். அந்த தீர்ப்பை நிறைவேற்றுவதற்குதான் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடுப்பார்கள் என்றால் சரியல்ல.

2.நான் இந்த வழக்கிற்கான புகாரை 09/09/2019 அன்று காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பினேன். தண்ட தீர்வை எப்போது முடிவடைந்தது என்றால் அதுபற்றிய ஆவணங்கள் தற்போது என்வசம் இல்லாததால் அதுபற்றி கூறமுடியாது. தண்ட தீர்வு நடவடிக்கையின் உத்தரவை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஒருவர் செலுத்த வேண்டிய பணத்தை செலுத்தினாரா இல்லையா என்ற விபரங்கள் அந்த தண்ட தீர்வை நடவடிக்கையின் உத்தரவை பார்த்தால் மட்டுமே தெரியவரும் என்றால் சரிதான்.

3. நான் கூட்டுறவு துணை பதிவாளர் பால் வளமாக பணியாற்றுகிறேன். பால் கூட்டுறவு சங்கங்களை கண்காணிக்கும் பொறுப்பு எனக்கு உண்டு என்றால் சரிதான். நான் பணியாற்றிய போது எனது கட்டுப்பாட்டின் கீழ் 186 பால் சங்கங்கள் செயல்பட்டது. அதற்கான தனி அலுவலரை நியமிக்கும் பொறுப்பு எனக்கு உண்டென்றால் அப்போது தனி அலுவலர் யாரும் பணியாற்றவில்லை. சரக முதுநிலை ஆய்வாளர் அந்த சங்கங்களில் பணியாற்றுவார். தனி அலுவலரை நியமிக்கும் பொறுப்பு துணை பால் ஆணையர்( கூட்டுறவு), சென்னை அவர்களுக்கு தான் உண்டு. முதுநிலை ஆய்வாளர்கள் எங்களது அலுவலகத்தில் பணியாற்றுவார்கள் என்றால் சரிதான். பால் சங்கங்களை கண்காணிக்கும் பொறுப்பு அவர்களுக்கு கூடுதலாக வழங்கப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. 186 பால் சங்கங்களுக்கு எத்தனை முதுநிலை ஆய்வாளர்கள் இருந்தார்கள் என்றால்

CWDA

நான் பணியாற்றிய போது 4 பேர் இருந்தனர். அவ்வாறு நியமிக்கப்பட்டதற்கான உத்தரவு ஏதும் இந்த வழக்கில் தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் இல்லை. துணை பதிவாளர் அலுவலகத்தில் உள்ள முதுநிலை ஆய்வாளர்கள் அவர்களது பணியையும் பால் சங்கங்களை கண்காணிக்கும் சங்கங்களையும் செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. சங்கங்களை கண்காணித்தல், பார்வையிடுதல், தணிக்கை அறிக்கை மீது நடவடிக்கை மேற்கொள்ளுதல் ஆகியவை முதுநிலை ஆய்வாளர்கள் செய்வார்கள். முதுநிலை ஆய்வாளர் என்பது மேற்பார்வை பணி என்றால் சரிதான். வனராஜன் என்ற முதுநிலை ஆய்வாளரை நூத்தப்பூர் சங்கத்திற்கு எந்த தேதியிலிருந்து எந்த தேதி வரை நியமித்தேனா என்றால் அவரை நான் நியமிக்கவில்லை. அவர் நியமிக்கப்பட்டதற்கான நியமண ஆணை எதையும் இந்த வழக்கில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. ஒவ்வொரு மாதமும் நான் சுமார் 10,15 பால் சங்கங்களை பார்வையிடுவேன். அப்படியானால் 186 பால் சங்கங்களை பார்வையிடுவதற்கு சுமார் 8 முதல் 9 மாதங்கள் ஆகும். நான் நூத்தப்பூர் சங்கங்கத்தை எத்தனை முறை எனது பணிகாலத்தின் போது பார்வையிட்டேன் என்றால் இரண்டு முறை பார்வையிட்டுள்ளேன். அதாவது, 2019 ம் ஆண்டு ஒரு முறையும், 2020 ம் ஆண்டு ஒரு முறையும் பார்வையிட்டுள்ளேன். இந்த வழக்கில் முறைகேடு நடைபெற்றதாக கூறப்படுவது நான் பணியாற்றிய காலத்தில் இல்லை. 2012-2013, 2013-2014 ஆகிய காலகட்டங்களில் இந்த வழக்கிற்கான முறைகேடு நடைபெற்றுள்ளது. ஜீலை 2019 முதல் ஜீன் 2021 வரை நான் துணை பதிவாளராக பணியாற்றினேன். சங்கத்தில் முறைகேடு நடைபெற்றது என பால் கூட்டுறவு சங்கத்தின் தணிக்கை துறை இயக்குநர் அவர்களால் அறிக்கை தாக்கல்

செய்யப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் தணிக்கை நடைபெறும் என்றால் சரிதான். அதை பால் கூட்டுறவு தணிக்கை துறையினர் செய்வார்கள். 2012-2013 ம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கையினை தணிக்கை செய்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் சம்பவம் நடைபெற்றதாக கூறப்படும் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கையினை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. ஆனால், தனி அறிக்கையினை தாக்கல் செய்துள்ளோம். நான் நூத்தப்பூர் பால் சங்கத்தினை ஆய்வு மேற்கொண்டதற்கான எந்த ஆவணத்தையும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கிற்கான விசாரணை அலுவலரை நியமிக்கவில்லை. எனக்கு முந்தைய அதிகாரி நியமித்துள்ளார். நான் ஆய்வு செய்த போது எந்த முறைகேடுகளையும் கண்டுபிடிக்கவில்லை. நான் பணியாற்றியதற்கு முந்தைய ஆண்டுகளுக்கான கணக்கு வழக்குகளையும் பார்க்க வேண்டியது எனது கடமை என்றால் சரிதான். அவ்வாறு நான் பார்வையிட்டு முறைகேடுகள் எதையும் கண்டறிந்தேனா என்றால் இல்லை. 186 சங்கங்களை முதுநிலை ஆய்வாளர் தனிப்பட்ட முறையில் கண்காணிக்க முடியாது என்றாலும், அவ்வாறு கண்காணித்தால் அது கூடுதல் சுமை என்றால் சரியல்ல. ஏனென்றால் 4 முதுநிலை ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அது தான் அவர்களது பணியே ஆகும். கூடுதல் பணியின் காரணமாக பணியில் கவனக்குறைவு ஏற்பட்டிருக்கலாம் என்றால் சரியல்ல. (விசாரணை முடித்து கொள்ளப்பட்டது).

Taken down by / before me in open court
read over/interpreted to the witness
in the presence of the accused/accused/
pleader and admitted by the witness to
be correct.

Judicial Magistrate No.I,
Perambalur.

JUDGMENT